யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | புவியியல் |
|---|---|---|

**புவியியல் – I**

பகுதி - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *01)* | **4** | *07)* | **1** | *13)* | **4** | *19)* | **2** | *25)* | **2** |
| *02)* | **2** | *08)* | **3** | *14)* | **1** | *20)* | **3** | *26)* | **1** |
| *03)* | **1** | *09)* | **5** | *15)* | **3** | *21)* | **4** | *27)* | **5** |
| *04)* | **3** | *10)* | **3** | *16)* | **1** | *22)* | **4** | *28)* | **3** |
| *05)* | **4** | *11)* | **2** | *17)* | **5** | *23)* | **1** | *29)* | **5** |
| *06)* | **5** | *12)* | **3** | *18)* | **1** | *24)* | **2** | *30)* | **1** |

பகுதி II

**விடைகள்**

*1)* i. *1)* நூலகம் *2)* உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் , சர்வோதய நிலையம்

ii. C. கொத்தணிக் குடியிருப்பு / அணுக்குடியிருப்பு

D. நேர்கோட்டுக் குடியிருப்பு / நாடாக் குடியிருப்பு

iii. F– மாகாண எல்லை

G– பாதுகாக்கப்பட்ட வன எல்லை

iv) a) சேனைப்பயிர்ச் செய்கை

b) ***நன்மை***

- குறிப்பிட்ட காலத்தின் பின் நிலம் பயிர் செய்யாது கைவிடப்படுவதனால் மண்ணிற்கு ஓய்வு கிடைக்கின்றது.
- இயற்கையுடன் இணைந்த பயிர் செய்கையாகக் காணப்படுகின்றது
- இரசாயன உர, கிருமி நாசினி பயன்பாடு குறைவு

***தீமை***

- காடு அழிக்கப்படுகின்றது
- மழை வீழ்ச்சி குறைவடைகின்றது
- விலங்குகளின் வாழிடம் குறைவடைந்து யானை – மனித மோதல் வலுவடைகின்றது.

v) உயர் மலைப் பிரதேசமாகக் காணப்படுகின்றமை.

அடர்ந்த காடுகள்

சேவை நிலையங்கள் விருத்தியடைவதில் காட்டுப் பகுதி, உயர் பிரதேசம் தடையாகக் காணப்படுகின்றமை.

vi) படப்பிரதேசத்தில்
ஆறுகள்
கிளையாறுகள்
குளங்கள் மூலம் நீர் வழங்கப்படுகின்றது.
நீர் வழங்கும் மூலங்களுக்கு ஏற்ப பயிர்ச்செய்கைப் பரம்பல் விருத்தியடையவில்லை என்றே கூறலாம்.
நெற்பயிர்ச் செய்கை சிறியளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.
மேற்கு பகுதியில் சிறியளவில் பிறபயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றது.
இடைத்தொடர்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

பிரதேசத்தின் மேற்கு அரைப்பகுதியில் மாதுறு ஓயா மூலம் நீர் மூலாதாரமாக காணப்படுகின்ற போதிலும் பயிர்ச் செய்கை விருத்தியடைவில்லை. சிறிய அளவில் இடையிடையே சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

02) i. அமைவிடங்களைத் துல்லியமாக எடுத்துக் காட்டலாம்.
தரவுகளை இற்றைப்படுத்திக் கொள்ளல், பகுப்பாய்வு செய்தல், காட்சிப்படுத்தல் இலகுவானது.
சேமிப்பது இலகுவானது தரவுகளைச் சேகரித்தல் இலகுவானது.

ii. மென்பொருளை இயக்குவதற்கான முறைவழியாக்கி
தரவுகளைச் சேமிப்பதற்குப் போதுமான நினைவகம்
உயர்திறன் கொண்ட வர்ண வரையத்திரை
தரவுகளின் உள்ளீடு, வெளியீட்டிற்கு ஏற்ற சாதனங்கள்
விசைப்பலகை
வர்ண அச்சுப்பொறி
Pen writer
Scanner
இலக்கமாக்கி – digitizer

iii. வேலைப்படையில் - புவி இடஞ்சார் உயர்தொழில் வல்லுனர்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது.
படவரை கலையியல் உற்பத்தியின் மிக விரைவாகவும் குறைந்த செலவிலும் மேற்கொள்ளப்படுதல்.
நவீன செல்லிடத் தொலைபேசிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளமை.
அச்சுப்பதிப்பு நுட்ப முறைகளில் ஏற்பட்ட தொழில் மாற்றங்கள்
3D கணினி வரைகலையியல்
படங்களின் பயன்பாடு பரந்தளவில் அதிகரித்துள்ளமை.

iv. சூழல் முகாமைத்துவம் - நீர் வளியின் தரம், நீரேந்து பிரதேச முகாமைத்துவம், அனர்த்தங்களின் கண்காணிப்பு
போக்குவரத்து - பூகோள இடநிலப்படுத்தல் முறைமையின் மூலமான வழிகாட்டல்
சுகாதாரம் - நோய்களில் பரவியுள்ள இடங்களை இனங்காணல், மருத்துவ மூலிகைச் செலவுகளின் பரம்பல், இடங்களை இனங் காணப் பயன்படுகின்றது.
நகர ஆய்வுகள்
மீன்பிடி – மீனினங்கள் பரம்பியுள்ள இடங்களை அறிய உதவுகின்றது.